சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:18/2020

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சாமிவேல்முருகன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>1 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

13.10.2023

1) விபத்தில் இறந்துபோன செளந்திரபாண்டியன் என்பவரின் கவனகுறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் வாகனத்தை கவனமாக ஓட்டினார் என்றும் விபத்திற்கு அவர் காரணமல்ல என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் 1 வது எதிர்மனுதாரர் வாகனம் 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட காப்பீடு நிலுவையில் உள்ளதால் எனக்கு ஏதாவது இழப்பீடு தரப்படவேண்டும்ள ன்றால் 2 வது எதிர்மனுதாரர் நிறுவனம் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால்ச ரியல்ல.

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2) நான் இதே விபத்து சம்மந்தமாக மதுரை நீதிமன்றத்தில் MCOP: 22/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு என்னானது

என்றால் அந்த வழக்கு தான் இங்கு மாறி வந்துள்ளது. அந்த வழக்கு மாறிவரவில்லை என்றும் அந்த வழககில் ஆஜராகமல் தள்ளுபடியானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மதுரையில் தாக்கல் MCOP: 22/2019 வழக்கை நான் மீண்டும் கோப்பிற்கு நடந்த போவதில்லை இந்த வழககில் மட்டுமே இழப்பீடு கோருகிறேன். நான் விபத்தின்போது காரியாபட்டியிலிருந்து அருப்புக்கோட்டை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்தேன். அந்த வாகனத்தை சௌந்திரபாண்டியன் என்பவர் ஓட்டினார். மற்றொரு வாகனம் எங்களுக்கு பின்னால் வந்தது. அது என்ன வாகனம் என்றால் கார். கார் ஓட்டுநரின் கவனகுறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய சௌந்திரபாண்டியனின் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முற்றிலும் குணமடைந்துவிட்டது என்றும் எனக்கு ஊனபாதிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

3) எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை அழைத்து விசாரித்தால் தால் மட்டுமே மருத்துவபில்கள் பற்றிய உண்மை தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கள் கூடுதல் இழபபீடு பெறுவதற்காக மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவற்றின் அடிப்படையில் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை. நான் மாதம் ரூபாய்20 ஆயிரம் வருமானம் ஈட்டியதாக சொல்லியிருப்பது உண்மை அல்ல என்றும் என்னை வருமானம் இல்லாத நபராக தான் கருதவேண்டும் என்றால்ச ரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. அது எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 2வது எதிர்மனுதாரர் பொறுத்து மனுதள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.